செ.வெ.எண்:276 நாள்:26.04.2018

## திருநெல்வேலி மாவட்டத்தில் தொழிலாளர் தினம் - மே -1 அன்று 425 ஊராட்சிகளும் கிராமசபை கூட்டம் நடைபெறும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

-----

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 425 கிராம ஊராட்சிகளிலும் தொழிலாளர் தினமான 01.05.2018 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் பின்வரும் பொருட்கள் விவாதிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

- ஜனவரி 2018 முதல் ஏப்ரல் 2018 முடிய கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்.
- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட அறிக்கையினை கிராம சபை கூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பெறுதல்.
- ஊராட்சியின் முந்தைய ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு கணக்கின் மீதான தணிக்கை குறிப்புகள் கிராமசபை கூட்டத்திற்கு முன் சமர்ப்பித்தல்.
- குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பாக.
- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் (VPDP) தொடர்பாக கிராம சபையில் தெரிவித்தல்
- அந்தியோதயா இயக்கம், மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பினையும், ஊராட்சிகள் அடிப்படை வசதிகள் குறித்த கணக்கெடுப்பு கிராம சபை ஒப்புதல் பெறவேண்டும்.
- 2018-2019-ம் நிதி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவிருக்கும் ஊராட்சி வளர்ச்சிப் பணிகளுக்குரான திட்ட அறிக்கையினை கிராம சபைக் கூட்டத்தில் ஒப்புதல் பெறுதல்.
- அனைத்து ஊராட்சிகளிலும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்துதல்.
- திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக அறிவிப்பது குறித்து விவாதித்தல்
- தனிநபர் இல்லக் கழிப்பறைகளை பயன்படுத்தாத பெயர் பட்டியலை கிராம சபையில் வாசித்தல்
- கிராம ஊராட்சிகளில் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையக் கழிப்பறைகள் பயன்படுத்துவது குறித்து விவாதித்தல்
- பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) பயனாளிகள் பட்டியலை கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறுதல்
- திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான தகவல் தெரிவித்தல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2017-18-ம் ஆண்டுக்கான தொழிலாளர் வரவு செலவுத் திட்டத்தினை டிசம்பா 31 வரையிலான முன்னேற்ற அறிக்கையினை ஒப்பிட்டு விவாதித்தல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் சாத்தியமான பணிகள் குறித்து விவாதித்தல்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், 2018-19-ம் ஆண்டுக்கான வேலை வழங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை (Labour Budjet) விவாதிக்க வேண்டும்.
- முந்தைய வருடத்தில் சமூக தணிக்கை நடைபெற்று இருந்தால் அறிக்கையினை (Observation and Compliant Reports)படிக்க வேண்டும்.
- மின்னணு வருகைப் பதிவேட்டினை (Elactronic Muster Roll) ஊராட்சிகளில் செயல்படுத்தும் முறையை விளக்க வேண்டும்.
- 2018-19-ம் ஆண்டுக்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்ட பணி விபரங்களை விவாதிக்கப்பட வேண்டும். (65 % விவசாயம் மற்றும் தொடர்புடைய பணிகள் 40% இதர பணிகள்)
- தனிநபர் இல்லக் கழிப்பறை திட்டம் குறித்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அனைவரது வீட்டிலும் கழிப்பறை கட்ட ஏற்பாடு செய்தல்
- ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல்.
- மகளிர் திட்ட செயல்பாடுகள் குறித்து விவாதித்தல்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் செயல்பாடுகள் குறித்த அறிக்கைகள்.
- கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு மற்றும் இதர காய்ச்சல் தடுப்பு குறித்து விவாதித்தல்.
- ஊராட்சி மன்றத் தனி அலுவலரால் கொண்டு வரப்படும் இதர பொருட்கள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

எனவே பொது மக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் திரளாக கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.